Registered as a NewsPaper　　பக்கங்கள் 06　　விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM　　Peoples Daily　மக்கள் தினசரி

நாதம் 03　　திருவள்ளுவர் ஆண்டு 2023　　ஆடி 21　　05 - 08 - 1992　　புதன்கிழமை　　ஓசை 169

## கடந்தவருட செய்முறைப் பரீட்சை ஆகஸ்ட் 15இல் ஆரம்பம்

கடந்த ஆண்டுக்கான க. பொ. த. உயர்தர விசேட பரீட்சையின் இசை, நடன செய்முறைப் பரீட்சைகள் வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளதாக யாழ். கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார். மேற்படி பரீட்சைகள் யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெறும். பாடசாலை தனிப்பட்ட பரீட்சார்த்திகளுககுரிய பிரவேசப் பத்திரங்கள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் தத்தமது பாடசாலைப் பரீட்சார்த்திகளுடன் தொடர்பு கொண்டு அனுமதி அட்டையில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில் தவறாது பரீட்சைக்கு சமுகமளிக்கச் செய்யவேண்டுமெனவும், தற்பொழுது நடைபெறும் க. பொ. த. உயர்தர 1992 பரீட்சைக்குத் (5 ஆம் பக்கம் பார்க்க)

# சிங்கள படைக்கு தொடர்ந்தும் பேரடி

# வவுனியாவில் 15 இராணுவத்தினர் பலி

## பவல் கவசவாகனம் அழிப்பு

[வவுனியா]

வவுனியா - இறப்பமடு சிறிலங்கா இராணுவத்தினர் மீது துணிகரத் தாக்குதல் ஒன்றை நேற்று விடுதலைப் புலிகள் நடத்தினர் 24 மணி நேரத்திற்குள் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இரண்டாவது வெற்றிகரமான தாக்குதல் இதுவாகும் முகாமிற்கு வெகு அருகில் நடைபெற்ற இத் தாக்குதலில் பதினைந்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயம் அடைந்தனர் பவள் கவச வாகனமொன்று புலிகளால் கைப்பற்றி அழிக்கப்பட்டது. சக்திவாய்ந்த பல நவீன ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

இம் மோதலில் புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச்சாவடைந்தார்.

நேற்றுக் காலை 7-35 மணியளவில் இறப்பமடு இராணுவ முகாமிலிருந்து வீதித்தடைகளை அகற்றுவதற்கு வெளிவந்த இராணுவத்தினரே புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகினர். பவள் கவசவாகனம் சகிதம், சுமார் இருபதிற்கு மேற்பட்ட படையினர் முகாமிலிருந்து 200யார் தூரம் வரையில் வந்து வீதித் தடைகளை அகற்றும் வேலையில் ஈடுபட்டிருந்தனர். இவ்வேளையில் முகாமிலிருந்து 150 யார் தூரத்தில் ஊடுபுகுந்து அதிரடித்தாக்கு தலைத் தொடுத்த விடுதலைப் புலிகள் இராணுவத்தினரை சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தினர்.

சுமார் 45 நிமிடங்கள் வரை நடைபெற்ற போரில் 15 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். ஏனையோர் காயங்களுடன் ஓடிவிட்டனர். மேலும், பவள் கவச வாகனத்தைக் கைப்பற்றிய விடுதலைபுலிகள் அதிலிருந்த ஆயுதங்களை அகற்றிவிட்டு கவசவாகனத்தை முற்றாக அழித்தனர்.

இதன்பின்னர் மாமடு பிரதான முகாமிலிருந்து தாக்குதல் நடைபெற்ற இடத்தை நோக்கி எறிகணைத் தாக்குதல் நடைபெற்றஅதேவேளை, உலங்கு வானூர்தி ஒன்றும் தொடர்ச்சியான 50 கலிபர் தாக்குதலையும் நடத்திய வண்ணமிருந்தது.

இதேவேளை, மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் நண்பகல் அளவில் மேற்கொண்ட தாக்குதல் ஒன்றில் 14 இராணுவத்தினர் கொல்லப்பட்டமை தெரிந்ததே

## புலிகள் கைப்பற்றிய சக்திவாய்ந்த ஆயுதங்கள்

(நமது நிருபர்)

வவுனியா இறப்பமடு இராணுவ முகாமிலிருந்து வெளியேறி வீதித்தடைகளை அகற்ற முற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர்மீது விடுதலைப்புலிகள் சுற்றிவளைத்து நடத்திய அதிரடித்தாக்குதலின் போது சக்திவாய்ந்த துப்பாக்கிகள் உட்பட பெருமளவு ஆயுதங்களை விடுதலைப்புலிகள் கைப்பற்றினர்.

இவ் அதிரடித் தாக்குதலின் போது விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு.

| | |
|---|---|
| ★ ஜி 3 ஏ.3 மகசீன் | - 29 |
| ★ ஏ. கே. மகசீன் | - 20 |
| ★ எல் 3 லிங்குடன் ரவை | - 330 |
| ★ ஏ. கே. எல். எம். ஜி. லிங் | - 475 |
| ★ நடுத்தர ரவைகள் | - 383 |
| ★ நேற்றோ ரக ரவைகள் | - 128 |
| ★ ஜே. ஆர். கைக்குண்டு | - 02 |
| ★ ஜே. ஆர். கறுப்பு நிற கைக்குண்டு | - 01 |
| ★ ரி.என் ரி. ரக கிரனைட் | - 01 |

## தமிழகத்தில் புலிகளை அடக்க ஜெயலலிதா தவறிவிட்டார்

### - வாழப்பாடி குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழக அரசு விடுதலைப் புலிகள் சம்பந்தமான பிரச்சினையில் மெத்தனமான போக்கை கடைப்பிடித்து வருவதாக தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தியும், தமிழக சட்டப் பேரவை எதிர்க் கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியமும் நேற்று சென்னையில் தனித்தனியே நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் குற்றச்சாட்டு தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட பின்பு தமிழக அரசு மிகவும் மெத்தனமாக இருப்பதால், அவ் இயக்கத்தின் மாநில ஆதரவாளர்களின் நடவடிக்கைகள் அதிகரித்து விட்டதாக வாழப்பாடி இராமமூர்த்தி தமிழக அரசைக் குற்றஞ்சாட்டினார். அத்துடன் தமிழக அரசு இனியும் மெத்தனமாக இருக்கக் கூடாது என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

தமிழகத்தில் விடுதலைப் புலிகளை அடக்குவதில் மாநில காவல்துறை மெத்தனம் காட்டி வருவதால் இப்போது கடலோரப் பகுதிகளில் புலிகளுக்கான பெற்றோல் மற்றும் டீசல் கடத்தும் செயல்கள் கிட்டத்தட்ட பழைய நிலைக்கு வந்துவிட்டதாகவும் பொலிசில் உள்ள சிலரின் உதவியால்தான் இத்தகைய நடவடிக்கைகள் அதிகரித்திருப்ப [6 ஆம் பக்கம் பார்க்க]

## ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு

### - நரசிம்மராவின் விருப்பம்

(சென்னை)

இலங்கையில் தமிழர்கள் தங்களுக்குள்ள நியாயமான பங்கைப் பெறவேண்டும் என்றும் அதுஒன்றுபட்ட இலங்கை என்ற அமைப்பிற்குள் இருக்க வேண்டும் என்றும் இந்திய பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

இத்தகவலை சிறிலங்காவிற்

நிலையத்தில் செய்தியாளர் மத்தியில் பேசியபோது இத் தகவலை வெளியிட்டார்.

இலங்கையின் இன்றைய நிலைகுறித்து இந்தியப் பிரதமர் கவலை தெரிவித்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆங்கில ஆசிரியர் தெரிவு தபாலில் அனுமதி அட்டைகள்

யளவில் இறப்பமடு இராணுவ முகாமிலிருந்து வீதித்தடைகளை அகற்றுவதற்கு வெளிவந்த இராணுவத்தினரே புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகினர். பவள் கவசவாகனம் சகிதம், சுமார் இருபதிற்கு மேற்பட்ட படையினர் முகாமிலிருந்து 200யார் தூரம் வரையில் வந்து வீதித் தடைகளை அகற்றும் வேலை

[illegible] முகாமிலிருந்து 150 யார் தூரத்தில் ஊடுபுகுந்து அதிரடித்தாக்குதலைத் தொடுத்த விடுதலைப் புலிகள் இராணுவத்தினரை சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தினர்.

சுமார் 45 நிமிடங்கள் வரை நடைபெற்ற போரில் 15 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். ஏனை

[illegible] கவச வாகனத்தைக் கைப்பற்றிய விடுதலைபுலிகள் அதிலிருந்த ஆயுதங்களை அகற்றி விட்டு கவசவாகனத்தை முற்றாக அழித்தனர்.

இதன்பின்னர் மாமடு பிரதான முகாமிலிருந்து தாக்குதல் நடைபெற்ற இடத்தை நோக்கி எறிகணைத் தாக்குதல் நடைபெற்றஅதேவேளை,

[illegible] தாக்குதலையும் நடத்திய வண்ணமிருந்தது.

இதேவேளை, மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் நண்பகல் அளவில் மேற்கொண்ட தாக்குதல் ஒன்றில் 14 இராணுவத்தினர் கொல்லப்பட்டமை தெரிந்தநதே

# புலிகள் கைப்பற்றிய சக்திவாய்ந்த ஆயுதங்கள்

(நமது நிருபர்)

வவுனியா இறப்பமடு இராணுவ முகாமிலிருந்து வெளியேறி வீதித்தடைகளை அகற்ற முற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர்மீது விடுதலைப்புலிகள் சுற்றிவளைத்து நடத்திய அதிரடித்தாக்குதலின் போது சக்திவாய்ந்த துப்பாக்கிகள் உட்பட பெருமளவு ஆயுதங்களை விடுதலைப்புலிகள் கைப்பற்றினர்.

இவ் அதிரடித் தாக்குதலின் போது விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு.

★ எல்.3 நடுத்தர இயந்திர துப்பாக்கிகள் - 02
★ ஏ.கே.எல்.எம்.ஜி. - 01
★ ஜி3.ஏ3. ரகதுப்பாக்கிகள் - 07
★ ரி 56-2ரக துப்பாக்கிகள் - 04
★ ரி 56-1 ரக துப்பாக்கிகள் - 02
★ ஏ. கே. எல். எம். ஜி.ரம்மகசீன் - 04
★ ஜி 3 ஏ.3 மகசீன் - 29
★ ஏ. கே. மகசீன் - 20
★ எல் 3 லிங்குடன் ரவை - 330
★ ஏ. கே. எல். எம். ஜி. லிங் - 475
★ நடுத்தர ரவைகள் - 383
★ நேற்ரோ ரக ரவைகள் - 128
★ ஜே. ஆர். கைக்குண்டு - 02
★ ஜே. ஆர்.கறுப்பு நிற கைக்குண்டு - 01
★ ரி.என் ரி. ரக கிரனைட் - 01
★ ஏ. கே. கோல்சர் - 09
★ ஜக்கட் கோல்சர் - 01
★ கெல்மட் - 05
★ சூ - 01 சோடி
★ மில்றிபெல்ற் - 03
★ கிற்பாக் - 01

## வீரச்சாவு



லெப். முத்துக்குமரன்

வவுனியா இறப்பமடு இராணுவத்தினர் மீது நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் ஒரு வீரவேங்கை வீரச்சாவு அடைந்தார். லெப். முத்துக்குமரன் (எமில்டன்) சோமசேகரம்நிமலநாதன், குறிசுட்டகுளம், கனகராயன் குளம், வவுனியா என்ற போராளியே வீரச்சாவு அடைந்தவராவர் இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# கரந்தடி போர் யுத்தியில் புலிகள் வெற்றிநடை

(லண்டன்)

விடுதலைப் புலிகள் தமது திட்டமிட்ட கரந்தடிபோராட்ட யுத்திகளால் வெற்றி நடை போடுவதாக பிபிசி நேற்று செய்தி ஆய்வுரைக் கண்ணோட்டத்தில் தெரிவித்தது.

வவுனியாவில் புலிகள் நடாத்திய தாக்குதலில் 15 இராணுவத்தினர் கொல்லப்பட்டது தொடர்பாக இவ்வாறு தெரிவிக்கப்பட்டது இதுபற்றி தெரிவிக்கையில் நாளுக்கு நாள் கொல்லப்படும் இராணுவத்தினர் தொகை அதிகரித்து வருகின்றது.

தமிழீழ விடுதலைப் போராளிகள் நகர்ப் புறத்தே தமது அதிரடிகளைத் தொடங்கியிருக்கின்றார்கள். இது விடுதலைப் புலிகளின் கோட்டையான யாழ்ப்பாணத்தை பாதுகாப்புப் படையினரின் தாக்குதலில் இருந்து பாதுகாக்கவும், அவர்களை வெளியேற்றவும் விடுதலைப் புலிகள் கையாளும் போர் யுக்தியாகலாம்.

அல்லது யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் இருமுனைத் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டதன் விளைவாகவும் இது இருக்கலாம் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணத்தின் மீது இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட இறுதித் தாக்குதலின் போது எவ்வளவு இராணுவத்தினர் கொல்லப்பட்டனரோ ஏறக்குறைய அதேயளவு கடந்தவாரம் தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட நகர்ப்புறத் தாக்குதல்களில் கொல்லப்பட்டுள்ளனர்.

இவற்றையெல்லாம் உள்ளடக்கிப் பார்க்கும் பொழுது இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு என்பது முடியாத காரியம் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 2 1/2 வருடகாலமாக நடந்து வரும் சண்டைகளால் இரு தரப்பினரும் முற்றாக போர் நிறுத்தத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

சண்டையின் விளைவால் அகதிகளாக இந்தியாவிற்கு வந்த மக்கள் மீண்டும் திருப்பி அனுப்பப்படுகின்றார்கள்.

பெரிய அளவிலான மாற்றம் எதையும் அவர்கள் சிறிலங்காவில் எதிர்பார்க்க முடியாது என பி.பி.சி மேலும் தெரிவித்தது.

அம்பாறை அகதிகள் புனர்வாழ்வுக்கு

# சுவிற்சிலாந்து தூதுவர் நேரடி முயற்சி

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள அகதிகளின்புனர்வாழ்வு நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபடுவதற்கு இலங்கைக்கான சுவிற்சிலாந்து தூதுவர் ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்.

இலங்கைக்கான சுவிற்சிலாந்துத் தூதுவர் கலாநிதி அன்ரே பிக்கிரமென்ற்ரெட் தூதரக அதிகாரிகள்சகிதம் அம்பாறை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களை நேரில்சென்று பார்வையிட்டார் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை சுவிற்சிலாந்து தூதுவர் மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் சென்று இன வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் புனர்வாழ்வளிக்கும் திட்டங்கள் சிலவற்றை

(6 ஆம் பக்கம் பார்க்க)

**ஈழத்தில் விஷக்குண்டு வீச்சா**
**எதிரியே உனக்கென்று வேறான காற்றா**

கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியமும் நேற்று சென்னையில் தனித்தனியே நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் குற்றச்சாட்டு தெரிவித்தனர்.

[illegible] பாடி இராமமூர்த்தி தமிழக அரசைக் குற்றஞ்சாட்டினார். அத்துடன் தமிழக அரசு இனியும் மெத்தனமாக இருக்கக் கூடாது என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

[illegible] கள் கிட்டத்தட்ட பழைய நிலைக்கு வந்துவிட்டதாகவும் பொலிசில் உள்ள சிலரின் உதவியால்தான் இத்தகைய நடவடிக்கைகள் அதிகரித்திருப்ப

[6 ஆம் பக்கம் பார்க்க]

# ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு

## - நரசிம்மராவின் விருப்பம்

(சென்னை)

இலங்கையில் தமிழர்கள் தங்களுக்குள்ள நியாயமான பங்கைப் பெறவேண்டும் என்றும் அதுஒன்றுபட்ட இலங்கை என்ற அமைப்பிற்குள் இருக்க வேண்டும் என்றும் இந்திய பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

இத்தகவலை சிறிலங்காவிற்கான இந்தியத் தூதுவர் என். என். ஜா தெரிவித்துள்ளார். நேற்று சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர் மத்தியில் பேசியபோது இத் தகவலை வெளியிட்டார்.

இலங்கையின் இன்றைய நிலைகுறித்து இந்தியப் பிரதமர் கவலை தெரிவித்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## செஞ்சோலை இசைமாலை

(நமது நிருபர்)

செஞ்சோலை சிறார்களும் விடுதலைப் புலிகளும் இணைந்து வழங்கும் இசைமாலை நிகழ்ச்சி நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி அரங்கில் இன்று இரவு 8-30 மணிக்கு ஆரம்பமாகும்.

செஞ்சோலை நிதி சேகரிப்புக்கென யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இந்நிகழ்ச்சிகளை பெருந்தொகையானமக்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

## சொற்பொழிவு

சுவீடன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் பீற்றர் சோக் நாளை மாலை 2. 30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ''சுவீடன் பல்கலைக் கழகக் கல்வி'' எனும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றுவார் என அறிவிக்கப்படுகிறது. இதனை யாழ். விஞ்ஞானச் சங்கத்தினால்ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## மண்ணெய் விநியோகம்

க. பொ. த. (உயர்தர) பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கும், புலமைப்பரிசில் பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கும் அவர்கள் பரீட்சை எடுப்பதை உறுதி செய்யும் இடத்து ஒரு மாணவருக்கு 2 லீற்றர் வீதம் மண்ணெண்ணெய் விநியோகிக்கப் படும். இவ்வாறு ஊர்காவற்றுறை பலநோக்கு கூட்டுறவுச்சங்க பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## ஆங்கில ஆசிரியர் தெரிவு தபாலில் அனுமதிஅட்டைகள்

(யாழ்ப்பாணம்)

ஆங்கில ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தீவகம் மற்றும் யாழ். குடாநாட்டிற்கு வெளியேயான பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் தவிர்ந்த ஏனையவை நேற்று தபாலில் இடப்பட்டுள்ளன.

தீவக விலாசப் பரீட்சார்த்திகள் வேலணைக் கல்விக் கோட்ட அலுவலகத்திலும், யாழ். குடாநாட்டிற்கு வெளியேயுள்ள பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளை யாழ். கல்வித் திணைக்களத்திலும் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது.

## இந்தியாவில் சிறுநீரக விற்பனைக்கு தடை

### இலங்கையர் பாதிப்பு

வேலூர் வைத்தியசாலைக்குச் செல்கின்றனர்.

(டில்லி)

இந்தியாவில் சிறு நீரக விற்பனையைத் தடைசெய்வது பற்றி இந்திய சுகாதார அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர். இதனால் மாற்றுச் சிறுநீரக சிகிச்சைக்கென இந்தியா செல்லும் இலங்கையர்கள் பாதிப்படைவார்கள் என கொழும்பு மருத்துவ பீடத்தைச் சேர்ந்தவரும் இலங்கை, யில் சிறுநீரக சிகிச்சைப் பிரிவின் பிரதம டாக்டருமான பேராசிரியர் ஏ. எச் ஷெரிப்டீன் தெரிவித்தார்.

இலங்கையிலிருந்து மாதாந்தம் சுமார் 10 பேர் சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு

## தீவக கல்வி மே. பாட்டு கழகம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பின் தீவகப் பிரிவினால் மாணவர்களின் நலன் கருதி 'கல்வி மேம்பாட்டுக் கழகம்' ஒன்று இன்று (5-8-92) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். புனிதமரியாள் வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. (22)


## நூலகர் தேவை

ஆங்கில நூல்கள் பகுப்பாக்கம் செய்யக் கூடியவர்கள்மட்டும் **விண்ணப்பிக்கவும்**

**விண்ணப்ப முடிவுத் திகதி 15 . 8 . 92**

**விள. இல: 164**
**மே/பா. ஈழநாதம்**
**31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்**

[2936]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கிணற்றுப்பங்குடன் 8 பரப் புத் தோட்டக்காணி அல்வாய் தெற்கில் கிராம சபைக்கு அருகாமையில் உண்டு. தொடர்பு திருமதி ப. சுப்பிரமணியம், அதிபர் அல்வாய் தெற்கு, அல்வாய் [சி/4773]

## வாங்கலாம் விற்கலாம்

பாவித்த தரமான கடிகாரங்கள், மேசை மணிக்கூடுகள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். உங்கள் மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொடுக்கப்படும் எம்மிடம் மணிக்கூடுகளும் றேடியோக்களும் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம். டில்காவாச்வேக்ஸ் ஸ்ரான்லி வீதி (வானவில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம் (2947)

## புதிய மீரா நாவல்

காலத்தைப் பிரதிபலிக்கும் கதைகள், சமுதாயப் பிடிப்புள்ள கதைகள் மீரா பிரசுரங்களாக இப்பொழுது வெளிவருகின்றது. ஐந்து நூல்களை வாங்கினால் ரூபா ஐம்பது பெறுமதியான மீரா பிரசுரம் அன்பளிப்பாக வழங்கப்படுகிறது. (2952)

## தையல் இயந்திரங்கள்

தையல் இயந்திரங்களை வாங்கவும், விற்கவும், பழுதடைந்த தையல் இயந்திரங்களை உங்கள் வீட்டிலேயே வைத்துத் திருத்தவும், உதிரிப் பாகங்களைப் பெற்றுக்கொள்ளவும். தையல் இயந்திர விற்பனை நிலையம். கண்டிவீதி, சாவகச்சேரி. (2953)

## விற்பனைக்கு

நீமியா உரம் நெற்பயிருக்கு சிறந்த அடிக்கட்டுப் பசளை எனக் கண்டறியப்பட்டுள்ளது. வளர்ச்சியின் போது பூச்சி புழுக்களிலிருந்து பாதுகாப்பு, அதிகரித்த விளைச்சல். கிலோ ரூபா 15/-, 20 கிலோ பக்கற் ரூபா 260/-. அண்ணா கோப்பிக் கடைகளிலும் கிடைக்கிறது. ''மில்க்வைற்'' [சி, 4824]

## கலந்துரையாடல்

பல நோக்கு கூட்டுறவுச்சங்க தலைவர்கள், பொதுமுகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் மணிக்கூட்டு வீதியில் உள்ள யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை மண்டபத்தில் சபையின் தலைவர் திரு. வை. செந்தில்நாதன் தலைமையில் நடைபெறும். (22)

# நினைவினில் நீங்காத ஈராண்டுகள்



வீர ஜனனம் 09 — 01 — 1970

வீரச்சாவு 5 — 08 — 1990

## கப்டன் ஜொனி

(செல்வன் தெட்சணாமூர்த்தி சத்தியதாஸ்)

முன்னாள் யாழ். மாவட்ட நிதிப்பொறுப்பாளர்

திதி: 12 08. 1992

கங்குல் அகன்றதொரு - காலை மலர்ந்திட - பாசமிகு
எம்முடன் நீண்டதோர் பிரிவை உண்டாக்கி ஈராண்டு காலமாக
எங்கே நீர் சென்றீர் . . . . ? ஈராண்டென்ன - இன்றும்
உம் மலர்ந்த முகம் எம் நெஞ்சத்தில் நிழலாடுகிறது.
எம் கண்ணோடு வழிகின்ற நீர் என்றும் ஓய்ப்போவதில்லை
எண்ணமெல்லாம் உம்நினைவாய் ஏங்குகின்றோம்.

இவருடன் யாழ். கோட்டையில் மாவீரராகிய, அனைத்துவேங்கைகளையும் இன்று நினைவுகூருகிறோம்.

பலாலி வீதி,
திருநெல்வேலி - வடக்கு,
யாழ்ப்பாணம்.
05 - 08 - 1992

- குடும்பத்தினர்

(2954)

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே
நண்பனே - என் நண்பனே



தாயின் மடியில் 13 — 10 — 1971

தமிழ் ஈழ மண்ணில் 5 — 8 — 1991

## வீரவேங்கை சதீஸ்குமார்

(தாமோதரம்பிள்ளை சோமசுந்தரம்)

(05 - 08 - 1991 அன்று ஆனையிறவுப் போரில் சங்கிலிக் கோர்வையில் நின்ற இராணுவத்தை உடைத்தெறிந்த போது வீரச்சாவு எய்தினார்.)

# நினைவு கூருகின்றோம் ...

## 1992 - 08 - 05

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1987 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் முகாமில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எம்மைப் பிரிந்த -

★ ஜெயா / அம்மான் (பூபாலசிங்கம் ஜெகதீஸ்வரன் - ஊரெழு, யாழ்)

1989 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - ஒட்டமாவடிப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

ஜெமில் (ஜெயாத் முகம்மது உசைதீன் - ஒட்டமாவடி மட்டச்களப்பு)

1990 ஆம் ஆண்டு யாழ். கோட்டையில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

கப்டன் விக்னம் (கந்தையா தவராசா - உடுத்துறை வடக்கு, தாளையடி, யாழ்)

யாழ். மாவட்ட நிதிப் பொறுப்பாளர்
கப்டன் ஜொனி (தெட்சணாமூர்த்தி சத்தியதாஸ் - பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்.)

கப்டன் கண்ணாடி / கண்ணன் (கந்தப்பிள்ளை அருட்செல்வம் - நந்தாவில் அம்மன் வீதி, கோண்டாவில்)

கப்டன் யசோதரன் (மணியம் கிருஸ்ணதாஸ் - கற்பகபுரம், பம்பைமடு, வவுனியா)

கப்டன் றொபின் (திருஞானசம்பந்தர் கருணாநிதி - தும்பளை, பருத்தித்துறை)

லெப். மோகன் (பாலசுப்பிரமணியம் பாலேந்திரன் - சந்தைமடு, பருத்தித்துறை)

லெப். நிசாந்தன் (செல்லையா அன்பழகன் - மணற்பகுதி, புத்தூர் கிழக்கு)

லெப். புரட்சி மாறன் (இராசநாயகம் தேவசகாயம் - நவாலி தெற்கு, மானிப்பாய்)

லெப். நெல்சன் (இராசலிங்கம் சிவகெங்காதரன் - 43, ஜெயந்தி நகர், கிளிநொச்சி)

லெப். சங்கீதா (ரேணுகா கனகசுந்தரம் - இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி, யாழ்.)

லெப். அனுரா (கௌரி தம்பிஐயா - 'பாக்கிய பவனம்', ஆரையம்பதி - 1, மட்டக்களப்பு)

2-ம் லெப். மாதங்கி (சுமதி மாணிக்கம் - மாதங்கி வீதி, வராத்துப்பளை, பருத்தித்துறை)

2-ம் லெப். அலிப் (வேலுப்பிள்ளை ஜெயபாஸ்கரன் - றேவடி, வல்வெட்டித்துறை)

2-ம் லெப். எட்றிச் (அருணகுலசிங்கம் குமாரகுலசிங்கம் - என். எம். வீதி, பருத்தித்துறை)

2-ம் லெப். சபேசன் (செந்திவடிவேல் ரஞ்சித்குமார் - 'லட்சுமி வாசா', காங்கேசன்துறை வீதி, வல்வெட்டித்துறை)

2-ம் லெப். நிசாந்தன் (விசுவலிங்கம் செல்வக்குமார் - லூர்து மாதா கோவிலடி, தும்பளை, பருத்தித்துறை)

2-ம் லெப் சரத்பாபு (கந்தசாமி அகிலேஸ்வரன் - அகிலேஸ்வரன் வீதி. கொக்குவில் கிழக்கு)

2ம் லெப். யோகன் / லோசன் (முத்துலிங்கம் சுரேசலிங்கம் : என். எம். வீதி, பருத்தித்துறை)

2-ம் லெப். டயஸ் (செல்வராஜா இராஜேந்திரகுமார் (பாபு) - இருபாலை கிழக்கு, கோப்பாய்)

ஜேம்ஸ் (சற்குணராசா எத்திராஜ் - கொத்தியால் ஒழுங்கை, நெடியகாடு, வல்வெட்டித்துறை)

கெனடி (வேலுப்பிள்ளை விஜயகுமார் - யாக்கரை, கரவெட்டி)

சீலன் / கண்ணன் (சுப்பிரமணியம் திருவருள்மூர்த்தி - செம்பாடு, பொலிகண்டி, வல்வெட்டித்துறை)

கப்டன் ஜோண்சன் (செல்வராஜா பஞ்சமனோ

# 2 ம் வருட நினைவலைகள்



பெற்றோரின் அரவணைப்பில் 12 - 05 -1972

தமிழீழத்தாயின் அரவணைப்பில் 05 - 08 - 199

## 2 ஆம் லெப். சபேசன்

(செந்திவடிவேல் ரஞ்சித்குமார்-வல்வை)

(முன்னாள் ஹாட்லிக் கல்லூரி மாணவன்)

திதி : 11 - 8 - 1992

விடுதலை கண்டிட வரிப்புலியானாய்
யாழ் கோட்டை தகர்த்திட உயிர்தந்தாய்
தமிழ் ஈழம் எங்கிலும் வீர உணர்வு தந்தாய்
தமிழர் இதயங்கள் அனைத்திலும் நீ மலர்ந்தாய்

05 - 08 - 90 அன்று வீரச்சாவு அடைந்த ஏனைய வீரவேங்கைளுக்கும் வீரவணக்கங்கள்.

'பொன்னா வில்லா'
இமையாணன்
உடுப்பிட்டி.
(ப. நோ. கூ. ச. பணிமனை முன்பாக)

தாய், தந்தை, சகோதரர், சகோதரி, உறவினர்கள், நண்பர்கள்

(2956)

2-ம் லெப். அலன் [கணபதிப்பிள்ளை ரவிச்சந்திரன் - ஆறுமுகத்தான் குடியிருப்பு, மட்டக்களப்பு)

2-ம் லெப். சில்வா (தங்கவேல் நாகராசா - கன்னாட்டி, கூழாங்குளம், அடம்பன் மன்னார்)

2-ம் லெப். நாராயணன் (நாகமுத்து யோகலிங்கம் - புனிதநகர், கற்கோவளம், பருத்தித்துறை)

சீலன் (குமாரசாமி ஜெயானந்தம் - நீர்வேலி தெற்கு)

2-ம் லெப். சபேசன் (தர்மரட்ணம் திருத்தணி - கங்குவேலி, மூதூர். திருக்கோணமலை)

சுரேஷ் (சுப்பிரமணியம் இலங்கேஸ்வரன் - முத்தமிழ் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்)

சதீஸ்குமார் [தாமோதரம்பிள்ளை சோமசுந்தரம் - மாசார்பளை, பளை)

சுதா (கந்தையா குணதாசன் - கிண்ணியடி, வாழைச்சேனை, மட்டக்களப்பு)

வெற்றிச்செல்வன் (ஸ்ரனீஸ்லோஸ் நிகிதராஜ் - 6-ம் வட்டாரம்; பேசாலை, மன்னார்)

சதானந்தன் (சேனாதிராஜா கேதீஸ்வரன் பொன்னாவெளி, மன்னார்)

வர்மா (சோமசுந்தரம் சிவசுதன் - அத்தாய், பூநகரி, மன்னார்)

மது (மணிவாசகம் வரதராஜன் - வட்டுக்கோட்டை கிழக்கு)

கபில் (சித்திரவேலாயுதம் சசிக்குமார் - திருமால்வீதி, திருகோணமலை)

றொமேஸ் (வடிவேல் முத்துக்குமார் - உடையார் கட்டு, முல்லைத்தீவு)

கேடில்ஸ் (சிறில் பிளேற்றன் - ரயில்நிலையவீதி)

பெறும். (22)

## இலவசவிநியோகம்

அல்வாய் தெற்கு பாரதி தாசன் சனசமூக நிலையம் கொழும்பு லயன்ஸ் கழகத்திட மிருந்து பெற்ற 75 மூக்குக் கண்ணாடிகளை பார்வை குறைந்தோருக்கு இலவசமாக வழங்கி வருகிறது. (82)

## இடமாற்றம்

கொழும்பு செல்லும் பயணி கட்கு ஆசனப்பதிவு செய்யும் காரியாலயம் முத்திரைச்சந்தி யிலிருந்து எதிர்வரும் 7. 8. 92 வெள்ளிக்கிழமை தொடக்கம் யாழ் பஸ் நிலையத்தில் உள்ள மணிக்குரல் விளம்பர சேவைக் காரியாலயத்தின் கீழ் உள்ள கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது. கொழும்பு செல்லும்பயணிகளுக்கான பஸ் சேவைகள் இக்காரியாலயத்திற்கு அண்மையில் இருந்து ஆரம்பமாகும் என்று வட பிரதேசசிற்றூர்திசேவைச்சங்ககங்ளின் இணையம் அறிவித்துள்ளது.

## சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் இன்று புதன் கிழமை மாலை 4.00மணியளவில் நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயத்தில் சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை கொண்டாடவுள்ளனர்.

சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரபபாடல்கள் ஓதலும், சொற்பொழிவும், பூசையும் இடம்பெறும்.

## பொறுப்பேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.அரசஅதிபரினால் நியமிக்கப்பட்ட இலங்கைச்செஞ்சிலுவைச் சங்க இடைக்கால நிர்வாக சபை நேற்று முன் தினம் உத்தியோக பூர்வயாக நிர்வாகத்தைப் பொறுப் பேற்றுக்கொண்டது. (பா)

---

போது வீரச்சாவு எய்தினார்.)

தானாட வில்லையம்மா தசையாடுது
தந்தை தாய் பிள்ளை என்றும் உறவாடுது.

அன்னாரின் வீட்டில் முதல் ஆண்டு கிரியை வைபவம் 07 - 08 - 1992 வெள்ளிக்கிழமை நடைபெறும்.

உன் பிரிவால் துயருறும்,
அம்மா, அப்பா, அக்கா, தம்பிமார்கள்.
உற்றார், உறவினர், நண்பர்கள்.

திருமால் வாசா,
மாசார்,
பளை.

(2902)

---

## நீங்காத ஓராண்டுநினைவலைகள்



**லெப். நித்தி**
(கிருஸ்ணபிள்ளை தவரத்தினம்)

வீரஜனனம்
10-11-1973

வீரச்சாவு
5-8-1991

சாகுதே தமிழ்க்குலமென்று தயவுடன் தானை தனைச் சேர்ந்தாய்
வேகுதே எம் நெஞ்சம் வேங்கை நித்தி உன் நினைவால்
சாவைத் தழுவி விட்டாய் சங்காாம் பலசெய்தாய்- என்றென்றும்
சாகுமோ உன் நாமம் தமிழர்தம் நெஞ்சத்திரையால்
உன் இலட்சியம் வென்றிட பிரார்த்திக்கின்றோம் உன் பெயரால்

ஆ. க. வெ. போரில் இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள்

கரம்பைக்குறிச்சி
மேற்கு-வரணி.

- குடும்பத்தினர்

(2961)

---

கப்டன் ஜோண்சன் (செல்வராஜா பஞ்சமனோகரன் - கோணேஸ்வரன் வீதி, வல்வெட்டித்துறை)
அனீபா (வடிவேலு உதயகாந்தன் .மட்டுவில் வடக்கு சாவகச்சேரி)
வசிட்டன் (சடையன் சுந்தரராஜன் -புத்தூர்கிழக்கு)
சந்துரு (இராசையா திருமாறன் - மண்டான்வீதி; கரணவாய் தெற்கு, கரவெட்டி)
பில்லா (அல்போன்ஸ் யேசுநாயகம் - முள்ளியான், வெற்றிலைக்கேணி)
விபுலன் (கலித்தா ஜோண்சன் பிரான்சிஸ் - 3-ம் வட்டாரம், நெடுந்தீவு)
பிலிப்ஸ் (கெ. ஜெயச்செல்வம் - கடியவுவீதி த தோட்டம், கொத்மலை, கண்டி)
மாதுரி (ரஞ்சினிதேவி இரத்தினசாமி - 'பாஸ்கரானந்தவேல் இல்லம்', கார்த்திக்வீதி, வல்வெட்டித்துறை)

அம்பாறை அக்கரைப்பற்றுப் பகுதியில் வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 13 தமிழர்கள்.

மட்டக்களப்பு ஏறாவூர்ப் பகுதியில்சிறிலங்கா இராணுவததினரால் கைது செய்யப்படடு சுட்டுக் கொல்லப்பட்டும், காணாமலும் போன சிற்பக் கலைஞர்களான 4 தமிழர்கள்.

யாழ். பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் கல்லூரி இடம்பெயர்ந்தோர் முகாம் மீது சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானத் தாககுதலில் கொல்லப்பட்ட 4 குழந்தைகள், 2 பெண்கள் உட்பட 6 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு ஆனையிறவு சிறிலங்காஇராணுவமுகாம் தகர்ப்பு முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆ.க.வெ. நடவடிக்கையின்போது வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவு வரையான இராணுவ சங்கிலித் தொடர் மீது புல்லாவெளிச் சந்தியில் வைத்து மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலின்போது வீரச்சாவெய்திய-

கப்டன் ராஜாராம் (கருப்பையா முத்துராஜா - வண்ணான்குளம், அடம்பன், மன்னார்)
லெப் நித்தி (கிருஸ்ணபிள்ளை தவரத்தினம் - கரம்பைக் குறிச்சி மேற்கு, வரணி)
லெப். காண்டேல் (முத்தையா சந்திரகுமார் - பல்லவராயன்கட்டு, பூநகரி, மன்னார்)
லெப். நிதி (நடராசா ஜெயராசா - 8-ம் வட்டாரம், பேசாலை, மன்னார்)
லெப். கலைச்செல்வன் (துரைசிங்கம் ரமேஸ் - வட்டுவாகல், முல்லைத்தீவு)
லெப். வாசு (பொன்னுத்துரை இந்திரகாசன் (இந்திரன்) - இல. 16, பாரதி வீதி, கில்னர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்)
லெப். ரகீம் (சிவக்கொழுந்து யோகநாதன் - பெரிய புல்லுமலை, மட்டக்களப்பு)
லெப். மாமன்னன் (அம்பலவாணர் பரமேஸ்வரன் களபூமி, காரைநகர்)
கேடில்ஸ் (சிறில் பிளேற்றன் - ரயில்நிலையவீதி)
ஜோண் (இராசப்பு விஜயதாசன்-வண்ணாங்குளம் முல்லைத்தீவு)
ககாலின் (செல்வராசா ரட்ணகாந்தன் - ஏறாவூர், மட்டக்களப்பு)
பீற்றர் (நாணுநாயகர் ஜெயராஜ் . 850 பருததித்துறை வீதி, யாழ்ப்பாணம்)
சித்திரன் (சிவசுந்தரலிங்கம் சிவகாந்தன் - பூவரசங்குளம் வவுனியா]
கணபதிப்பிள்ளை (சுப்பையா குமாரவடிவேல் - பன்னிச்சையடி இயக்கச்சி கிளிநொச்சி)
சீனு (மணியம் சிவராசன் - பாலம்போட்டாறு தம்பலகமம், திருக்கோணமலை)
ஜெசிந் / சரண்ராஜ் (துலசிங்கம் கபிலன் - 37, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்)
கப்டன் லக்கி (தங்கரஜனி முத்துலிங்கம் -வேம்படி உடுத்துறை, தாளையடி)
லெப். லலிதா (இரஞ்சிதமலர் பாலசுந்தரம்- தம்பலகமம், திருக்கோணமலை)
2-ம் லெப். அசாவேதி (ஜானகி கனகரத்தினம்- கோழியாகுளம், ஓமந்தை, வவுனியா)
2-ம் லெப் ஜமுனா (சிவஜோதி ராமச்சந்திரன் - விநாயகபுரம், திருக்கோயில், அம்பாறை)
கவிதா / கென்சியா (கெல்ன் தேவநாயகம் - பெரியவிளான், இளவாலை)
நிவேதா (சிவச்செல்வி சிவபாதம் - 104, யூதா கோயிலடி, லிங்கநகர், திருக்கோணமலை)
சங்கீதா (மேரி காளிமுத்து - ஆலங்குளம், கனகராயன்குளம், வவுனியா)
நிதி (வசந்தமலர் செல்லத்துரை - கச்சாய் தெற்கு, கொடிகாமம்)
விஜிதா (பத்மாதேவி நன்னித்தம்பி -கலைவாணிவீதி, சித்தங்கேணி)
ஆதித்தன் (இராமசாமி கஜேந்திரன் - மாங்கேணி, வாழைச்சேனை, மட்டக்களப்பு]
நிசாம் தவராசா தர்மராசா - திருக்கோயில், அம்பாறை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ளமாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி/4815]

## தவற விடப்பட்டது

01 - 08 - 92 அன்று சனிக்கிழமை தாண்டிக்குளம் சிறிலங்கா இராணுவ சோதனை நிலையத்தில் (File)பயில் உடன் முக்கியமான பல ஆவணங்கள் தவறவிடப்பட்டுள்ளது அதனைக் கண்டெடுத்தவர்கள் சிவா வர்த்தக களஞ்சியம் (Siva Trading Co.), டச்சுறோட், சாவகச்சேரி அல்லது கந்தன் களஞ்சியம், கிளிநொச்சியில் ஒப்படைக்கவும் ஒப்படைக்கமுடியாதவர்கள் அறியத்தந்தால் வந்து பெற்றுக்கொள்ளப்படும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்


தகவல்:
சிவா ரேடிங் கோ,
டச்சு றோட்,
சாவகச்சேரி.

(2948)

## 2-ம்வருட நினைவு அஞ்சலி

மைந்தனாய் 22 — 06 — 1970

மாவீரனாய் 05 — 08 — 1990



### வீரவேங்கை பில்லா

அல்போன்ஸ் யேசுநாயகம் (றவி)
(வெற்றிலைக்கேணி, முள்ளியான்)

வேங்கைக் கொடி சுமக்கும் வீரத் தமிழினத்தின்
தனிப்பெரும் வீரம மிக்க தலைவரை தழுவிநிற்கும்
தம்பிமார் மத்தியிலே தளைத்த தமிழ்ப் புலியே
ஜெயித்திடும் யுத்தம் தன்னில் பில்லாவாய் சேர்ந்து விட்டாய்
மானமுள்ள மறவன் நீ கோட்டையிலே மாய்ந்தாலும்
மங்காப் புகழுடனே மலர்கின்ற ஈழமதில்
தயங்காது வந்தெம்மை தழுவி அணைத்திடவே
தமிழீழம் வழிசமைக்கும் தரணியில் இது உறுதி

யாழ். கோட்டையில் சிறிலங்கா இராணுவத்துடனான மோதலில் 1990- 8- 5ஆம் திகதி வீரமரணமடைந்த சக போராளிகளுக்கும் எமது அஞ்சலியைசெலுத்துகின்றோம்.

செம்பியன் பற்று. பெற்றோர், சகோதர, சகோதரிகள்

(2927)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரமலர்வு: 10 — 10 — 1973

வீரமடிவு 05 — 08 — 1991



### கப்டன் லக்கி (சுதா)

(முத்துலிங்கம் தங்கறஜனி)

(1991ஆம் ஆண்டு ஆனையிறவு இராணுவமுகாம் தகர்ப்பு முயற்சியின்போது புல்லாவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்.)

ஈழத்தின் விடுதலைக்காய் உன்னை ஈந்து
இன்றுடனே ஓராண்டு முடிந்ததம்மா
பாசத்தின் வேதனையில் நாங்களிங்கு
படும்துயரம் யாருனக்கு எடுத்துரைப்பார்.

இவருக்கும், இதுவரை வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்கட்கும் எமது அஞ்சலிகள் சமர்ப்பணம்.
5-08-92 இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் முதலாம் ஆண்டு நினைவு தினத்தில் கலந்துகொள்ளுமாறு சகபோராளிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.


வேம்படி உடுத்துறை, (வடமராட்சி கிழக்கு.
2861)

இவரது பிரிவால் வாடும் அம்மா, அப்பா, சகோதரர்

## 1-ம் வருட நினைவு அஞ்சலி

வீர ஜனனம் 17 — 10 — 1973

வீர விதைப்பு 05 — 08 — 1991



### வீரவேங்கை ஜெசிந்

[குலசிங்கம் கபிலன்]

யாழ். இந்து க. பொ. த உயர்தர கணிதப்பிரிவு மாணவன் [1992]

காலத்தை வென்றவன் - நீ
காவியமாகி விட்டாய்
காலங்கள் கடந்தாலும் - உன்
காட்சி எம் இதயங்களிலும்
கண்களிலும் நிறைந்து நின்று
நிழலாடுகின்றன . எங்கள் குஞ்சை மறக்கமுடியுமா?


ஆனையிறவுச்சமரில் மறைந்த அனைத்துப் போராளிகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

82Aசீனியர்லேன்,
கலட்டி,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
தந்தை, தாய்,
சகோதரிமார்,
உறவினர்கள், நண்பர்கள்.

(சி/4820)

## 31-ம்நாள் கண்ணீர்அஞ்சலி



வீரஜனனம் 10 - 03 - 1975

வீரச்சாவு 06 - 07 - 1992

### வீரவேங்கை கலையரசன்

(றொபின்சன்)
[அரிகர்தாசன் டொரிக்ரொத்]

இந்த மண் மீட்பிற்காய் போரிடும்
செந்தமிழ் வேங்கைகள் படையணியில் - எங்கள்
மைந்தனே நீயோர் கலையரசன் ஆனாய்
சிந்தையில் நிறைந்தாய் தொடர்வோம் உன்பணி.

- இடம்பெயர்ந்த மயிலிட்டி கடற்றொழிலாளர் ஒருங்கிணைப்புச்சங்கம்.

வீரமாணிக்க தேவன் துறை, மயிலிட்டி.

(2942)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம்
10.11.1 72
வீரச்சாவு
05.08.1991

### லெப்டினன்ட் மாமன்னன்

(அம்பலவாணர் பரமேஸ்வரன்)

1991-08-05-ஆம் திகதி கட்டைக்காட்டில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில்வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

கட்டைக்காடு மண்ணில் களம் கண்டு
நாட்டைக் காக்க நடந்த பெரும் போரில்
மாமன்னன் நீயும் உன்னுயிர் தந்தாய்
எம்மினம் வாழ! உன் இலட்சியம் ஈடேறும்.

29/11 தேவாலய வீதி
ஓட்டுமடம்
யாழ்ப்பாணம். (சி/4819)

## இன்று

(யாழ்ப்பாணம்)

முடமாவடி ஞானவைரவர் சனசமூக நிலையம் லெப். சங்கீதாவின் இரண்டாம் ஆண்டு நினைவு நாளையொட்டி நிகழ்ச்சிகளை நடத்த உள்ளது.

இன்று 05-08-1992 காலை 6.00 மணிக்கு மேற்படி நிலைய அங்கத்தவர்களுக்கான ஐந்து மைல் 'மரதன் ஓட்டப்போட்டியும், மாலை 3 30 மணிக்கு லெப். சங்கீதா ஞாபகார்த்த வெற்றிக்கேடய கரபந்தாட்ட இறுதிப்போட்டியும் பார்வையாளருக்கான செற்அப் கரபந்தாட்ட போட்டி பிற்பகல் 6.00 மணிக்கு அஞ்சலிக் கூட்டமும் நடைபெறவுள்ளன.

★ ★ ★ ★

நல்லூர் உற்சவகால இசை நிகழ்ச்சியில் தெய்வீக இசையரங்கில் இன்றைய நிகழ்ச்சியில் எஸ். செல்லத்துரை அவர்கள் பாட உள்ளார். இவருக்கான பக்கவாத்தியக் கலைஞர்களாக வயலின் ஆர். எஸ். கேசவமூர்த்தியும் மிருதங்கம் எஸ். மகேந்திரன் அவர்களும் பங்கேற்கின்றனர்.

## உற்சவத்தை முன்னிட்டு சமய அறிவுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி யாழ் மாநகராட்சி மன்றம் பாடசாலை மாணவர்களுக்கான போட்டி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருக்கிறது. சைவசமய அறிவுப் போட்டி, பண்ணிசைப் போட்டி, சமய அறிவுப்பேச்சுப் போட்டி ஆகிய போட்டிகளே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

மேற்படி போட்டிகளுக்கான நிபந்தனைகளையும், அனுமதிப் பத்திரங்களையும், நல்லூர் கந்தசுவாமி கோவில் மேற்கு வீதியில் உள்ள யாழ் மாநகர சுகாதார அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு போட்டிக்கும் தனியான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் பிரவேசக் கட்டணம் 20 ரூபா ஆகும். சகல போட்டிகளுக்குமான முடிவுத் திகதி இம் மாதம் 20 ஆம் திகதி பிற்பகல் 5.00 மணி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## போட்டிகள்

முதியோர் நல்வாழ்வு சர்வதேச தொண்டர் ஸ்தாபதனத்தின் இலங்கை கிளையினால் ''முதியோர் நல்வாழ்வு'' பற்றி அகில இலங்கை ரீதியாக 1991 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வட இந்து மகளிர்கல்லூரி மாணவி செல்வி கனிமொழி- கதிரவேற்பிள்ளை இரண்டாம் இடத்தைப் பெற்று அதற்கான ஆயிரம் ரூபா பரிசையும் பெற்றுக் கொண்டார். [82]

★ ★ ★

[யாழ்ப்பாணம்]

பேராசிரியர் லூதர் ஜெயசிங்கத்தின் மூன்றாவதுஆண்டு ஞாபகார்த்த தினத்தையொட்டி யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட பொது அறிவுப்போட்டியில் பேராசிரியர் லூதர் ஜெயசிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்தையும், வெற்றிக் கிண்ணத்தையும் ஹாட்லிக்கல்லூரி மாணவர் அணி பெற்றுக் கொண்டது.

உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இப்போட்டியை யாழ்ப்பாணம் றோட்டரிக்கழகத்தினர் ஒழுங்கு செய்துநடத்தினர்.

இப்போட்டிகளில் இறுதி போட்டியில் ஹாட்லிக் கல்லூரியும், உடுவில் மகளிர் கல்லூரியும் கலந்து கொண்டனர்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட திருமதி ஜே. எம் சிவப்பிரகாசம் வழங்கினார்.

(42)

## 2-ம் ஆண்டு நினைவு அஞ்சலி



### லெப். சங்கீதா
(செல்வி ரேணுகா கனகசுந்தரம்)
திருநெல்வேலி

| தமிழீ மண்ணில் முளையாக | தமிழீழமண்ணில் விதையாக |
| --- | --- |
| 04 - 09 - 1974 | 05 - 08 - 1990 |

அன்பின் திருவுருவே!
கோட்டையைப் பிடிக்க ஏறிய புலிகள்
எரிந்த இடமெனக் காலங்கள் கூறும்
நீ விழுந்த இடத்தில் புல்லும் முளைக்கலாம்
காலச் சுவடுகள் கோலம் மறைக்கலாம்-ஆனால்
நீ எரிந்த இடத்தில் கோபுரம் எழும்பும்
உனது கனவுடன் தமிழீழம் மலரும்.

05 - 08 - 90 இல் இவருடன் யாழ். கோட்டையில் வீரச்சாவு எய்திய அனைத்து வேங்கைகளுக்கும் சிரம் தாழ்த்தி அஞ்சலிக்கிறோம்

சங்கீதா வீதி,
(இராமலிங்கம் வீதி)
திருநெல்வேலி கிழக்கு

அப்பா, அம்மா, அண்ணா,
தங்கை, உறவினர்கள்
(2892)

---

மாவீரர் நினைவாக !
**லெப்.சங்கீதா** இரண்டாவது ஆண்டு
## நினைவு அஞ்சலிக்கூட்டம்

**இடம்:** திருநெல்வேலி முடமாவடி ஞான வைரவர் ச.ச.நிலைய மைதானம்
**காலம்:** 5. 8. 1992 பி.ப. 6.00 மணி

விடுதலைப் புலிகள் அரசியல் துறை பிரமுகர்களும் விடுதலைப் புலிகள் மகளிர் அணியினரும் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றுவார்கள்.

லெப். சங்கீதா நினைவாக நடத்தப்பட்ட கரபந்தாட்ட - மரதன் ஓட்டப்போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்கள் வழங்கப்படும். (2957)

---

## ஈராண்டு இதய அஞ்சலி



### கப்டன் கண்ணன் (கண்ணாடி)
(கந்தப்பிள்ளை அருட்செல்வன்)

| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
| --- | --- |
| 09-01-1970 | 05-08-1990 |

ஓ ...... மாவீரனே
மனம் ஏந்திவரும் காற்றும்
முந்தி வரும் பாட்டும்
காதருகில் வந்து—உன்
கதை சொல்ல கேட்கின்றோம்
ஈராண்டு முடிந்த தென்று
... உணர்கின்றோம்.
தேசங்கள் முழுவதும் உன்னை
சுமந்து நிற்பதை புரிகின்றோம்.

கோண்டாவில். —குடும்பத்தினர்
(2940)

---

## பதுக்கல் மண்ணெய் கைப்பற்றப்பட்டது

(கரவெட்டி)

நெல்லியடிப் பகுதியில் தமிழீழக் காவல்துறையினர் மேற்கொண்ட சோதனையின் போது கொள்ளை இலாபம் பெறும் நோக்கோடு வியாபாரிகளால் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பெருமளவு மண்ணெண்ணெய் கைப்பற்றப்பட்டது. இதன் ஒருபகுதி வதிரி சந்தையடியில் வைத்து 02-08-92 அன்று போத்தல் இருபத்தொரு ரூபாவாக பொது மக்களிற்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. மேலும் பல இடங்களில் இம் மண்ணெண்ணெய் பொது மக்களிற்கு வழங்கப்படவுள்ளது. (06)

---

## நிவாரண கடனுக்கு வரி; அபத்தமான நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 1983 -1987 வரையான காலப்பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளின் போது ஏற்படுத்தப்பட்ட சேதங்களுக்கு நிவாரணமாக மிகக் குறைந்த வட்டி வீதத்தில் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் நிவாரணமாக வழங்கப்பட்ட இக் கடன்களுக்கு பாதுகாப்பு வரி அறவிடுவதென்பது முழுக்க முழுக்க அபத்தமான ஒரு நடவடிக்கை ஆகும்.

இவ்வாறு ஒன்றிணைக்கப்பட்ட புனர்வாழ்வு புனர்நிர்மாணத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட புனர்வாழ்வு கடன்களுக்கு பாதுகாப்புவரி அறவிடுவதை நிறுத்துமாறு கோரி குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் யாழ். அரச அதிபரூடாக நிதிதிட்டமிடல் அமைச்சுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அம்மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது யாழ். மாவட்ட மக்களைப்பொறுத்தவரை இன்று அவர்கள் மிகக்குறைந்தளவு பாதுகாப்பு உத்தரவாதம் கூட இல்லாது வாழ்க்கை நடத்துகின்றனர். கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்கள், ஷெல் தாக்குதல்களின் மத்தியில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இந் நிலையில் இம் மக்களிடம் பாதுகாப்புவரி அறவிடத் தீர்மானிக்கப்பட்டிருப்பது எமக்கு அதிர்ச்சியை அளிக்கின்றது. எமது மக்களைக் குண்டு வீசியும் ஷெல் அடித்தும் கொல்ல எமது மக்களிடமே பணம் அறவிடும் ஒரு நடவடிக்கையாகவே இதைக் கருதவேண்டி உள்ளது.

எனவே இப் புனர்வாழ்வுக் கடன்களுக்கு பாதுகாப்பு வரி அறவிடும் அநியாய நடவடிக்கையை உடன் இரத்துச் செய்யுமாறு அம்மகஜரில் கோரப்பட்டுள்ளது

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரப்பிறப்பு
31 - 10 - 1964

வீரச்சாவு
5 - 8 - 1990

### கப்டன் யசோதரன்
( மணியம் கிருஷ்ணன் )

என்றும் நாம் மறவோம்......
மழலையாய் பிறந்தாய் தமிழீழத்திலே
கல்வியினை தொடர்ந்தாய் வன்னி மண்ணிலே
குடும்பத்தினைக் காக்க தொழிலாளியானாய்-இன்று
மண்ணினை காக்கும் பணியில் மாவீரனாகிவிட்டாய்
சிங்களக் குடியேற்றத்தால் சீற்றம் கொண்ட நீ
எண்பத்தி மூன்றதில் சமூகத் தொண்டனானாய்
அந்நிய இனத்தவனின் அடக்குமுறையை ஒழித்திட
எண்பத்தி நான்கதில் புலி வீரனாய்
சிங்களவன் மட்டுமல்ல இந்தியனும் எதிரியானவேளை
சிதறடித்து பல தாக்குதல்கள் செய்தாய்
போர்க்களங்கள் பலகண்ட புலிவீரா - உன்னை
வாழ்க்கையில் என்றும் நாம் மறவோம்,

பம்பைமடு,
வவுனியா.

குடும்பத்தினர், நண்பர்கள்.
(சி/4821)

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

| வீரஜனனம் | வீரச்சாவு |
| --- | --- |
| 07 - 08 - 1968 | 05 - 08 - 1990 |



### கப்டன் விக்னம்

வடமராட்சியின் கிழக்கில் வந்துதித்தான்
வரிப்புலிகள் பாசறையில் பயிற்சி பெற்றான்
விடுதலையை விரும்பியதால் களத்தில் நின்றான்
வேங்கையினை விக்னம் என்றே அழைத்தார்
உண்மையில் ஆண்டவனின் படைப்புகள் என்றோ ஒரு நாள்
மண்ணிலே மடியுமென்ற நியதியுண்டானால் நீங்கள்
களத்தினில் மடிந்ததாலே காவியநாயகர்கள்
வரிசையில் வாழுவீர்கள் வரலாற்றில் ஈழத்திலே

முன்னாள் வடமராட்சி கிழக்குப் பிரதேசப்பொறுப்பாளரும் 05-08-90 அன்று யாழ் கோட்டை இராணுவ முகாம் தாக்குதலில் வீரமரணமடைந்தவராவர்.

உடுத்துறை
வடமராட்சிகிழக்கு

இவரது பிரிவால் வாடும்
அம்மா, அய்யா, சகோதரர்கள்
(2891)

---

### விளை. போட்டி

(பருத்தித்துறை)

யாழ். கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட 1992 ஆம் ஆண்டிற்கான மெய்வல்லுநர் போட்டிகளின் மூன்று போட்டிகளில் முதலாவது இடங்களைப் பெற்றுக்கொண்ட தென் புலோலி புற்றளை மகாவித்தியாலய மாணவி செல்வி சிவகௌரி இராஜலிங்கம் யாழ். மாவட்ட வீராங்கனையாக (சாம்பியன்) தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கொத்தணி, கோட்டப் போட்டிகளில் முதலாவது இடங்களைத்தட்டிக்கொண்ட இவர் யாழ். மாவட்டப்போட்டிகளிலும் 100 மீற்றர், 200 மீற்றர், நீளம் பாய்தல் (15 வயதிற்குட்பட்டோர்) ஆகிய மூன்று போட்டிகளிலும் சாதனைகளை நிலை நாட்டியுள்ளார். செல்வி சிவகௌரியை வித்தியாலய அதிபர் திரு. எ. யோசுவா பாராட்டியுள்ளார். (25)

## மாணவருக்கு மண்ணெய் விநியோகம்

(கரவெட்டி)

நெல்லியடியிலமைந்த ''தமிழகம் விற்பனைநிலையத்தில்'' மாணவருக்கு நியாய விலையில் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படுகிறது.

நடைபெறும் க.பொ.த.(உயர்தர) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்க்கே மேற்படி மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படுகின்றது. தமது பரீட்சை அனுமதி அட்டையினைக் காண்பிக்கும் ஒவ்வொருவருக்கும் மூன்றுலீற்றர் மண்ணெண்ணெய்விநியோகிக்கப்படுகிறது

அண்மையில் நெல்லியடிப்பகுதியில் கைப்பற்றப்பட்ட மண்ணெண்ணெயின் ஒரு பகுதியும் மாணவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட உள்ளதாகவும் பருத்தித்துறை காவல்துறையினர் தெரிவித்தனர் (06)

### விண்ணப்பிக்கவும்

(யாழ்ப்பாணம்)

கல்விப்பட்டப்படிப்பின் டிப்ளோமா முழுநேரம், பகுதிநேரம் 1 ,பகுதி நேரம் 11 ஆகிய மாணவர்கள் ஆண்டு இறுதிப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விண்ணப்பங்களை பரீட்சைக் கிளையில் பெற்றுக் கொள்ளுமாறு உதவிப்பதிவாளர் பூ. ஜெகதீஸ்வரன் கேட்டுள்ளார்.

பரீட்சார்த்திகள் 04-09-1992 முன்னர் சமர்ப்பிக்கும் படி கோரியுள்ளார். (05 )

சிந்தனைக்கு

அவமானம் அறியாத இடத்தில்
மானம் இராது.

- ஆபிரிக்க பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 05- 08- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
க. பொ. எண் - 05

## அந்நிய நாடு பாதுகாப்பு தராது

இலங்கை தமிழ் அகதிகளை இந்தியாவிலிருந்து திருப்பி அனுப்பும் இரண்டாவது கட்ட நடவடிக்கை நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. இதன் முதல் கட்ட நடவடிக்கையாக, 'இந்தியன்ஏயார் லைன்ஸ்' விமானம் மூலம் 132 அகதிகள் திருமலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இவ்வருட ஆரம்பத்தில் இந்திய அரசும், சிறிலங்கா அரசும் தமக்கிடையில் ஏற்படுத்திக் கொண்ட இவ் உடன்பாட்டின் அடிப்படையில் அகதிகளை இந்தியா அனுப்பி வைக்கத் தொடங்கியது அகதிகளின் விருப்பத்திற்கு மாறாக, அவர்களை ஏமாற்றி,வற்புறுத்தி இந்தியா மேற்கொண்ட இவ் நடவடிக்கை சர்வதேச மனிதநேய ஸ்தாபனங்களின் பலமான கண்டனத்திற்கு உள்ளானது.

இதைத் தொடர்ந்து அகதிகளை திருப்பி அனுப்பும்நடவடிக்கைகளைச்சற்றுததள்ளிப்போட்டிருந்த இந்தியாதற்பொழுதுஅகதிகளுக்கானஐ.நா.ஸ்தாபனத்துடன் ஓர்உடன்படிக்கையைசெய்து கொண்டு அகதிகளைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கையில் ஈடுபடுவதாக அறிவித்துள்ளது.

ஆனால் எடுத்த எடுப்பிலேயே இந்திய அரசாங்கம் இவ் உடன்பாட்டை மீறியது. அகதிகளுக்கான ஐ.நா. அதிகாரிகளின் விசாரணையில்தாயகம் திரும்பசம்மதம் தெரிவிக்கப்பட்ட அகதிகளே திருப்பி அனுப்பப்படுவார்கள் என உடன்பாடு செய்து கொண்ட இந்தியா,ஐ.நா. அதிகாரிகள் தமிழகம் வரும் முன்னரே முதல் தொகுதி அகதிகளை விமானம் மூலம்திருமலைக்கு அனுப்பிவைத்துள்ளது

அத்தோடு மண்டபம் அகதிமுகாமிலிருந்த 148 தமிழ்க் குடும்பங்களையும் இராமநாதபுரம் தடுப்புக்காவலில் இருந்த 32 அகதிகளையும் வற்புறுத்தியும், ஏமாற்றியும் தமிழக அதிகாரிகள் வெளியேற்றியுள்ளனர். அதாவது யூ.என்.எச்.சி ஆர். அமைப்புடன் உடன்பாடு கண்டபோதும் தமிழ்நாட்டு அரசாங்கம் தமிழக அகதிகளை வற்புறுத்தியே வெளியேற்ற முனைந்துவருகின்றது.

ஆனால், இந்தியா இலங்கைத் தமிழரைக்

# உலகின் ஒரே வல்லரசு அமெரிக்காவே

# பென்டகனின் எதிர்காலத் திட்டம்

உலகில் ஒரே ஒரு வல்லரசாக அமெரிக்கா மட்டுமே இருக்க வேண்டும். இதை எந்த ஒரு நாடோ, பல நாடுகளின் கூட்டமைப்புமோ எதிர்க்க முடியாதபடி ஆக்கபூர்வமான நடவடிக்கையும், போதுமான ராணுவ பலமும் அமெரிக்கா பெற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்டகன் தயாரித்துள்ள இரகசிய அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்கால ராணுவநடவடிக்கைகளை திட்டமிடுவதற்காக தயாரிக்கப்படும் ''டிஃபென்ஸ் பிளானிங் கைடன்ஸ்'' என்னும் இந்த இரகசிய அறிக்கை ''நியூயோர்க்டைம்ஸ்''பத்திரிகையில் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. அமெரிக்காவின் பாராளுமன்றமான காங்கிரஸுக்கு கையளிக்கப்படாத இவ் அறிக்கையை இராணுவ தலைமையகத்தின் கொள்கை வகுப்பு பிரிவின் கீழ் நிலைச் செயலாளரான பால். டி உல்பே விஸின் மேற்பார்வையில் தயாரிக்கப்பட்டுள்ளது

★ இதில் மேலும் கியூபா,வட கொரிய ஆகிய இருநாடுகளிலும் ஏற்படப் போகும் 'தீவிர அரசியல்' பொருளாதாரச் சிக்கல்களினால், அவை பகுத்தறிவற்ற செயல்களில் இறங்குமெனில் அதனை எதிர்கொள்ள அமெரிக்கா தயாராக இருக்க வேண்டும்.

★ ரஷ்யாவின் கேந்திரமான நிலைகளுக்கு எதிராகத் தொடர்ந்து அமெரிக்க அணு ஆயுதங்கள் குறி பார்க்கவேண்டும்.

★ பழைய 'நேட்டோ' இராணுவக் கட்டமைப்பை விரிவாக்கி கிழக்கு ஐரோப்பாவையும் அதனுள் கொண்டு வர வேண்டும்.

★ இந்தியா, பாகிஸ்தான், வடகொரிய, ஈராக் போன்ற நாடுகள் அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபடாமல் தடுக்கவும்— பெரும் அழிவுகளை ஏற்படுத்தக்கூடிய வேறு ஆயுதங்களை உருவாக்காமல் தடுக்கவும் தேவைப்பட்டால் அமெரிக்கா இராணுவ பலத்தைப் பயன்படுத்த தயாராக இருக்க வேண்டும். என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை கடந்த ஆண்டு பெப்பரவரி மாதம் பதினெட்டாம் திகதி முகல் இருபத்திரண்டாம் திகதி வரை அமெரிக்க இராணுவத் தலைமையகத்தில் ''ஜெனரல் டைனமிக்ஸ்'' என்ற ஆயுத சப்ளை கம்பெனியின் அதிகாரிகளும், அமெரிக்க இராணுவ ஆலோசகர்களும் சில ஆலோசனைகளை நடத்தியுள்ளனர்.

அவ் ஆலோசனைகளில் உலகின் பதின்மூன்று வட்டாரங்களில் நிகழும் மோதல்கள், சண்டைகள் போராக வெடிக்கும் சாத்தியம் உண்டென்றும் அத்தகைய தொரு நிலை இந்திய உபகண்டத்திலும் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தியாவும், பாகிஸ்தானும் காஷ்மீர் விவகாரம் தொடர்பாக போரில் இறங்கினால் அணு ஆயுதப் போரைத் தவிர்ப்பதற்காக அமெரிக்காவும் யுத்தத்தில் இறங்கி இந்தியாவின் இரா[illegible]கியமான கேந்திர[illegible]த் தாக்கி அழித்து ப[illegible]ப்படுத்த வேண்டுமென்றும் கூறப்பட்டு இருக்கிறது.

> தமிழகத்திலிருந்து வெளிவரும்.
> 'ஜூனியர்போஸ்ட்' இதழின் 10-4-92 வெளியீட்டில் 'இந்தியா மீது தாக்குதல் நடத்தஅமெரிக்கா திட்டம்' என்னும் தலைப்பில் வெளியான கட்டுரையிலிருந்து தொகுக்கப்பட்டது.

மேலும் இதற்காக 307ரக க்ரூயிஸ் ரக ஏவுகணைகள் இந்துமா கடல் பகுதியிலுள்ள டீகோகார்சியா தீவில் வைக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜெனரல் டைனமிக்ஸ் என்னும் நிறுவனத்தைச் சேர்ந்த இந்த அதிகாரிகள் நடத்திய விளக்க விவாத ஆலோசனைக் கூட்டத்தில் தங்கள் எதிர்கால திட்டத்திற்கு அடிப்படையாக அமெரிக்க விமானப்படை லெப்- ஜெனரல் ஜி. எல். பட்லர் அமெரிக்க காங்கிரஸ் முன் அளித்தசாட்சியத்தையே கொண்டிருந்தனர்.

இராணுவ அதிகாரியான பட்லர் தமது அந்த விளக்க உரையில் அமெரிக்கா எதிர்காலத்தில் மூன்று முக்கிய விடயங்களைக் கவனிக்க வேண்டியிருக்கும் என்று குறிப்பிட்டிருந்தார்.

(1) நெடுநாள் பகையுடைய நாடுகள் சச்சரவில் ஈடுபட்டு போரில் இறங்கக் கூடும். உதாரணம் இந்தியா — பாகிஸ்தான்.

(2) ஏழை நாடுகளில் மனிதர்களின் நிலை படுமோசமாகிக் கலவரம் ஏற்படக் கூடும்.

(3) பிராந்திய வல்லரசுகளாகஉருவாகசிலநாடுகள் புதியமுயற்சிகளில்ஈடுபடுவதால் மோதல்கள் உருவாகலாம்.

இந்த நிலைமைகளைச் சமாளிப்பதற்கு அமெரிக்காவிற்கு என். ஜி. சி. எம் எனப்படும் நியூ ஜெனரேசன் க்ரூபிஸ் ஏவுகணைகள் தேவைப்படும் என்பது ஜெனால் டைனமிக்ஸ் நிறுவனத்தின் ஆலோசனை.

இவ்வாறு போர்க்களக் காட்சிகள் கற்பனை செய்யப்படுவது வழக்கமான ஒன்றுதான் என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. ஆனால் ஓராண்டுக்கு முன்பு ஜெனரல் டைனமிக்ஸ் பட்டியலிட்ட பதின்மூன்று வட்டாரங்களில் லிபியாவும் அடங்கும் என்பதும் இப்போது லிபியாவுக்கு எதிராக ஐ. நா. சபை மூலமாகவே அமெரிக்கா நிர்ப்பந்தங்களைப் பிரயோகிக்கத் தொடங்கியுள்ளது என்பதும் கவனிக்கத் தக்கது. அத்துடன் வளைகுடாப் போரில் ஈடுபட நேரும் என்று விவாதிக்கப்பட்டு ஒரு வருடத்தில் ஈராக் மீது தாக்குதல் நடந்ததும் தெரிந்ததே.

அதாவது உலகின் பொலிஸ் காரனாக அமெரிக்கா தன்னைத்தானே நியமித்துக் 'கொண்டு விட்டது என்பதும் ஒழுங்காக' நடந்து கொள்ளாத நாடுகளைக் கண்காணித்து 'ஒழுங்கு மீறினால்' உதைத்து சரி செய்ய அமெரிக்கா தயாராகி வருகின்றது என்பதும் தற்போது நிரூபணமாகி வருகின்றது.

## பஞ்சாப்பில் நிலக்கண்ணி வெடித்தது

## ஆறு படையினர் பலி; மூவர் காயம்

(டில்லி)

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் தேரா பாபா நாநக் பகுதியில் கோட்டிலா சூரத் கிராமத்திற்கு அருகே நிலக்கண்ணி ஒன்று வெடிக்க வைக்கப்பட்டதால் எல்லைக் காவல் படையை சேர்ந்த ஆறு பேர் கொல்லப்பட்டதுடன் மேலும் மூவர் காயமடைந்துள்ளனர் தீவிரவாதிகளின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கான பொலிஸ் காவல் நிலையம் ஒன்றிற்கு உதவிக்காக விரைந்து சென்ற எல்லைக் காவல் படையினர் மீது தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது.

இதே வேளை அமிர்த சரஸ் மாவட்டத்தில் நிகழ்ந்த மற்றுமொரு சம்பவத்தில் தீவிரவாதி ஒருவர் கொல்லப்பட்டதாகவும், பட்டிண்டா மாவட்டத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்த ஒருவர் தப்பியோடியதாகவும் தெரிய வருகின்றது.

அணு ஆயுத பரவல் தடுப்பு

## உடன்படிக்கையை பிரான்ஸ் முறைப்படி அங்கீகரித்தது

(பரிஸ்)

அணு ஆயுத பரவல் தடுப்பு உடன்படிக்கையை முறைப்படி அங்கீகரித்துள்ளதாக பிரான்ஸ்

படிக்கையில் கையெழுத்திட பிரான்ஸ் மறுத்து வந்தது குறிப்பிடத்தக்கது.

## நிலப் பிரச்சினைக்கு தெரிவுக்குழு தீர்வுகாணும்

**—மங்களமுனசிங்க**

எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் பாராளுமன்ற தெரிவுக்குழு சில முக்கிய விவகாரங்களில் தீர்வு காணும் என்று பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவரான மங்களமுனசிங்க நம்பிக்கை தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில் நிலம். சட்டம் ஒழுங்கு,மற்றும் அதிகாரப் பரவலாக்கல் ஆகிய விடயங்களை பாராளுமன்ற தெரிவுக்குழு பொருத்தமாக கையாளும் என்றும் குறிப்பிட்டார்

சிறிலங்கா இராணுவ

## தலைமை அதிகாரியாக பாலரட்ணராஜா நியமனம்

மேஜர் ஜெனரல் வை. பாலரட்ணராஜா சிறிலங்காவின் இராணுவ தலைமை அதிகாரியாக கடந்த சனிக்கிழமை

கொண்ட ராணுவப்படையின் ராணுவத்தளபதிக்கு அடுத்த தாக ராணுவ தலைமை அதிகாரி பதவி அமைந்துள்ளது

ஆனால், இந்தியா இலங்கைத் தமிழரைக் காட்டிக் கொடுத்ததும், கைவிட்டதும் இது முதற் தடவை அல்ல. 1987ஆம் ஆண்டு இலங்கை-இந்திய சமாதான உடன்படிக்கைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட காட்டிக்கொடுப்பு இன்றும் தொடர்ந்த வண்ணமேயுள்ளது. இதற்காக உலகில் இந்தியா தனது கௌரவத்தையே கைவிட்டுவிட்டது.

இது குறித்து தமிழக அகதிகள் மறுவாழ்வுத் துறைச்சிறப்பு ஆணையாளர் ராமதாஸிடம் பி.பி.ஸி செய்தியாளர் கோரியபோது அவர் அளித்த பதில் அகதிகள் விடயத்திலும் யூ.என்.எச்.சி.ஆருடனான உடன்பாடு குறித்தும் தமிழக அரசு எவ்வளவு அசட்டையாக நடந்து கொண்டுள்ளது என்பதையே காட்டுவதாகவுள்ளது. "அனுப்பப்பட்டது 132 அகதிகள் மட்டுமே, இது ஒரு பெரிய விடயமல்ல" என அவர் பதிலளித்துள்ளார். இதிலிருந்து அகதிகளின் விருப்பிற்கு தமிழக அரசு எந்தளவிற்கு முதன்மை அளித்துள்ளது என்பதையும் புரிந்து கொள்ளமுடியும்.

1983இல், இனப்பிரச்சினை தீவிரமடைந்தபோது இவ்விவகாரத்தில்வலிந்து தலையிட்ட இந்தியா, முதலில் தனது நலனுக்காக தமிழரைப் பகடைக்காய்களாக்கியது. பின்னர், தமிழரை நேரடியாகக் காட்டிக் கொடுக்க முற்பட்டது. ஆனால், இதற்குப் பின்னரும் சிறிலங்கா தொடர்பான இந்திய இராஜதந்திரம் வெற்றிபெறவில்லை. மாறாகப் பெரும் அவமானத்தையே தேடிக்கொடுத்தது இந்நிலையில் தமது இராஜதந்திரத் தோல்விக்கு தமிழர்மீதுபழிசுமத்தும் நோக்கில் இந்தியா இன்று செயற்பட்டுவருகின்றது அதாவது தமதுஅணுகுமுறையில் ஏற்பட்டதவறைத் திருத்திக்கொள்ளாமல், தமது உரிமையை நிலைநிறுத்தப் போராடும் ஒரு சிறுபான்மை தேசிய இனம் மீது அழுத்தத்தைத் திணிக்கின்றது.

ஆனால், தாயக மண்ணிலிருந்து வெளியேறி அந்நிய மண்ணில் அகதிகளாகவும், அடிமைகளாகவும் வாழ்வது, என்றுமே பாதுகாப்பானதல்ல என்பதை உலகம் பூராவும் சிதறிப்போய் அகதிகளாகஇன்று வாழ்க்கை நடத்தும் இலங்கைத் தமிழருக்கு இது ஒரு படிப்பினையாகும். எந் நெருக்கடியிலும் தாயகம் வழங்கும் பாதுகாப்பை அந்நிய தேசம் வழங்காது என்பதனை புரிந்து கொள்ள இப்படிப்பினை போதுமானதாகும்.

---

உடன்படிக்கையை முறைப்படி அங்கீகரித்துள்ளதாக பிரான்ஸ் அறிவித்துள்ளது.

பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் பரவலை தடுப்பது என்று பிரான்சின் உறுதிப்பாட்டை செயல்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பிரான்சின் வெளியுறவுத் துறை அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, முன்னாள் சோவியத் யூனியன் மற்றும் வேறு நாடுகளிடையே சமச்சீரற்ற அணு ஆயுத நிலைமை இருப்பதாகக் கூறி கடந்த 24 ஆண்டுகளாக இந்த அணு ஆயுத பரவல் தடுப்பு உடன்

குறிப்பிடத்தக்கது.

கின்றது.

# பாகிஸ்தான் பிரதமரின் காபூல் விஜயம் ரத்து

பாகிஸ்தான் பிரதமர்நவாஸ் ஷெரீப் தனது காபூல் விஜயத்தை ரத்துச் செய்தார். ஆப்கான் தலைநகரான காபூலில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற குண்டு மற்றும் ராக்கெட் தாக்குதல்களையடுத்தே இந்த விஜயம் ரத்துச் செய்யப்பட்டது.

இந்தத் தாக்குதலில் இராணுவ அதிகாரி ஒருவரும் கொல்லப்பட்டார்.

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி புர்ஹானுடீன் ரபானியுடன் ஞாயிற்றுக் கிழமை நடத்தப்படவிருந்த பேச்சுவார்த்தைகள் ரத்துச் செய்யப்பட்டன.

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ரபானி எதிர்வரும் 14 ஆம் திகதி நான்கு நாள் விஜயமொன்றில் பாகிஸ்தான் வரவிருக்கிறார்.

காபூலில் குண்டு வெடிப்பு குறித்து எவரும் உரிமைகோரவில்லை. காபூலில் விமான நிலையத்தின் மீது 20 ராக்கெட்டுகள் ஏவப்பட்டன. இதனால் விமானங்கள் தரையிறங்குவது தடைப்பட்டது.

## ஆற்றில் மூழ்கி 5பேர் மரணம்

(சென்னை)

தமிழகத்தில் ஆடிப்பெருக்கின் போது ஆற்றில் மூழ்கி ஐந்து பேர் இறந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கருங்கடல் கடற்படை பகிர்ந்துகொள்ள உடன்பாடு

கருங்கடல் பகுதியில் நிலைகொண்டுள்ள முன்னாள் சோவியத் யூனியனுக்கு சொந்தமான கடற்படைக் கப்பல்களைப் பகிர்ந்து கொள்வது தொடர்பாக ரஷ்யாவும், உக்ரைனும் ஒரு உடன்பாட்டுக்கு வந்துள்ளன.

இக்கப்பற்படையையெவ்வாறு பங்கிட்டுக் கொள்வது என்பது தொடர்பான இவ்உடன்பாட்டின் படி மூன்றாண்டுகளுக்கு பகிர்ந்து கொள்வதற்கு ரஷ்ய ஜனாபதி பொரிஸ்யெல்ட்சினும், உக்ரைன் ஜனாதிபதி லிபோறிட் சிராங்குக்கும் இணங்கியுள்ளனர். தம் இருவருக்குமிடையிலான புரிந்துணர்வுக்கு இவ்ஒப்பந்தம் ஒரு சாட்சியாகும் எனவும் அவர்கள் கூட்டாகத் தெரிவித்துள்ளனர் கருங்கடல் கடற்படைப்பிரிவு சுதந்திரப்பொதுநல அமைப்புக்களின் தலைமையிலிருந்து உக்ரைனும் பொதுநல கூட்டு அமைப்பும் இணைந்த தலைமையின் கீழ் செயற்படுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

## விமானம் விடுவிப்பு

நஷ்ட ஈட்டுத் தகராறு காரணமாக கடந்த வெள்ளியன்று மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏயர் லங்கா விமானம் மலேசிய நீதிபதியின் உத்தரவின் பேரில் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டது.

# குஜராத்தில் துப்பாக்கிச்சூடு 8பேர் பலி; 3பேர் காயம்

(காந்திநகர்)

குஜராத் மாநிலத்தில் அகமதாபாத் நகருக்கு அருகேஉள்ள தொழிற்சாலை ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் எட்டுப்பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் மூன்று பேர் காயமுற்றுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு காரில் வந்த அடையாளம் தெரியாத நான்குபேர் துப்பாக்கிகளால் சுட்டனர் என்று குஜராத் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# ஆயுதகுறைப்பு உடன்பாடு ஜேர்மனி அமுல் செய்கிறது

1990ஆம் ஆண்டில் நேட்டோவும் அப்போதைய வார்சோ அமைப்பும் செய்து கொண்ட ஆயுத குறைப்பு உடன்படிக்கையின்படி ஜேர்மனி முதலாவது ஐரோப்பிய நாடாக டாங்கிகளையும் வழக்கமான மற்ற ஆயுதங்களையும் அழிக்கத் தொடங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1995ஆம் ஆண்டிற்குள் ஐரோப்பா முழுவதும் 40,000 ஆயுதங்கள் அகற்றுவதற்கு இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது.

---

இராணுவ தலைமை அதிகாரியாக கடந்த சனிக்கிழமை முதல் நியமிக்கப்பட்டுள்ளார் என கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேஜர் ஜெனரல் ஸ்டான்லி டி. சில்வா ஓய்வு பெற்றதை அடுத்து சிறிலங்கா ஜனாதிபதி ஆர்.பிரேமதாசாவினால் இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

எண்பதினாயிரம் பேரைக்

தாக ராணுவ தலைமை அதிகாரி பதவி அமைந்துள்ளது என்றும்,

ராணுவத் தளபதி லீவில் சென்றாலோ அல்லது ஓய்வு பெற்றாலோ இப்பதவியை வகிப்பவரே ராணுவத்தளபதியாக நியமிக்கப்படுவது ராணுவ மரபாகும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# காணிக்கொள்கை குறித்து ஒப்பந்தம் எதுவுமில்லை

(கொழும்பு)

காணிக்கொள்கை சம்பந்தமாக எந்தவொரு தனிநபருடனும் ஒப்பந்தமும் செய்து கொள்ளப்படவில்லை என்றும் எதிர்காலத்திலும் இத்தகைய ஒப்பந்தம் செய்து கொள்ளும் நோக்கமும் இல்லை என்றும் அமைச்சர் அத்துக்கோரள தெரிவித்தார்

தோட்டக்காணிகள் சம்பந்தமாக புதிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதற்கு காங்கிரசின் யோசனைகள் என்ற தலைப்பில் நேற்று லங்காதீப பத்திரிகை வெளியிட்ட செய்தி தவறானது என்று தோட்டத் தொழிற்துறை அமைச்சும், காணி அபிவிருத்தி மகாவலி அபிவிருத்தி அமைச்சும் கூட்டாகமறுப்புத் தெரிவித்துள்ளது.

காணி இல்லாதவர்களின் தேவைகளைப்பூர்த்திசெய்யும் வகையில்காணிகளைப்பகிர்ந்தளிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என்று காமினி அத்துக்கோரள கூறியுள்ளார் அவர் மேலும் கூறுகையில் ஜனாதிபதியின் காணி சம்பந்தமான செயலணியினால் மூன்று லட்சத்துஐம்பதாயிரம் பேருக்கும் அதிகமானோருக்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்

# சிங்கள மீனவர்களுக்கு திருமலையில் உதவி திட்டம்

(கொழும்பு)

திருக்கோணமலை மாவட்டத்தில் சிங்கள மீனவர்களின் முன்னேற்றத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் ஆறுகோடியே இருபது லட்சம் ரூபாவுக்கும் அதிகம் பெறுமதி வாய்ந்த மீன்பிடி வள்ளங்களும், உபகரணங்களும் வழங்கப்படவுள்ளது வங்கிகளின் மூலம் இத்தொகை வழங்கப்பட இருப்பதுடன் பதினைந்து சதவீத அரசாங்க மானியமும் வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தின்படி 55 படகுகளும் பலநாட்கள் கடலில் தரித்து நிற்கக்கூடிய 37 இழுவைப் படகுகளும் வழங்கப்பட இருக்கின்றன.

---

கடந்த வருட தோற்றிக் கொண்டிருக்கும் பரீட்சார்த்திகள் நேரமாற்றம் செய்ய வேண்டியேற்படின் பரீட்சகர் குழுவிடம் நேரில் சென்று மாற்றுத் திகதியை 25ஆம் திகதிக்கு முன்னர் மாற்றம் செய்து கொள்ள வேண்டும்என்றுதிரு.சுந்தரலிங்கம் கேட்டுள்ளார்.

# ஈழநாதம்

# தமிழர் நம்பக்கூடியதாக சிங்கள ஆட்சி அமையவில்லை

## -சந்திரிகா

(கொழும்பு)

கடந்த காலங்களில் ஆட்சி செய்த சிங்கள அரசுகள் குறிப்பாக யு. என். பி ஆட்சி தமிழர்களை நடத்திய முறைகளைப் பார்த்தால் வடக்கு-கிழக்கு தமிழர்கள் சிங்களக் கட்சிகள் அமைக்கும் அரசில் நம்பிக்கை வைப்பார்களோ என்பது சந்தேகத்திற்குரியது இவ்வாறு திருமதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அரசியல்கொள்கை வகுப்பாளர் என்று இப்போது கருதப்படும் திருமதி சந்திரிகா குமாரதுங்க பல முக்கிய விஷயங்களில் கட்சியின் நிலை குறித்து அண்மையில் கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தில் தமிழர் வாழும் பிரதேசங்கள் வடக்குடன் இணைக்கப்பட வேண்டும். கிழக்கில் சிங்களவர் வாழும் பகுதிகளுக்கென புறம்பான ஒரு நிர்வாக அமைப்புத் தேவை. அதே போன்று தமிழர் பகுதிகளில் வாழும் முஸ்லிம்களுக்கென்று தனியான ஒரு நிர்வாகத்தை ஏற்படுத்துவது பற்றிக் கவனத்தில் கொள்ளவே ்டும் என்று கூறினார்.

தமிழர் இந்த நா ்டுப் பிரசைகள் என்ற வகையில் சிங்களவர் பெறும் அத்தனை உரிமைகளையும் தமிழரும் அனுபவிக்க உரிமையிருக்க வேண்டும் தமிழருக்கான உரிமைகளை வழங்குவதற்குப் பெரும்பான்மைச் சமூகமான சிங்களவர் முன்வரவேண்டும் என்றும்

வடக்கு-கிழக்குப்பிரச்சினைக்குச் சிறிலங்கா சுதந்திரக் கட்சி எவ்வகையான தீர்வை முன்வைக்கிறது என்பதை முழு உலகமுமே அவதானித்துக் கொண்டிருக்கிறது சுதந்திரக்கட்சி மீது சிறுபான்மையினர் கொண்டிருக்கும் நம்பிக்கையைக் குறைப்பதற்கு ஹெல உறுமல குழு வேண்டுமென்று சதி செய்வதாகஅவர் கண்டனம் தெரிவித்தார். சுதந்திரக்கட்சி இந்தக்குழுவின் அரசியல் போக்கை ஆதரிக்கவில்லை என்றும்,

மாகாணசபைகளுக்கு மேலதிக அதிகாரங்களை வழங்குவதன் மூலம் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரத்தைப் பரவலாக்கலாம் என்றும் அவர் கூறினார்.

தமிழர் பிரச்சினைக்கான இத்தீர்வுத்திட்டத்தை மற்றவர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை இப்போது சிறிமாவோ பண்டாரநாயக்காவும் மற்றத் தலைவர்களும் கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

---

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## பாடசாலை அபிவிருத்திச் சபை

கல்லூரிப் பாடசாலை அபிவிருத்திச் சபைக்குப் பெற்றோர் பிரதிநிதிகள் மூவரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் 09-08-1992 ஞாயிறு பி. ப 3.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

பெற்றோர் மட்டுமே இக் கூட்டத்திற்கு வருகைதர முடியும்.

தவறாது வருகை தருக,

27-7-92 அ. பஞ்சலிங்கம்
அதிபர்
(சி/4831)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம் 02 — 12 — 1971

வீரச்சாவு தாயக மண்ணில் 05 — 08 — 1991

## லெப்டினன்ட் வாசு

(30 கலிபர் வாசு)

(பொன்னுத்துரை இந்திரஜன்)

---

## சுவிஸ்

ஆரம்பித்துவைத்தார்.

சுவிற்சிலாந்து நாட்டின் உதவியால் அமைக்கப்பட்ட கட்டடங்களையும் பாதிக்கப்பட்ட தமிழ் அகதிகளுக்காக அவர் அங்கு திறந்துவைத்தார். பின்னர் அவர் மன்னார் மாவட்டத்திற்கும் பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகருடன்விஜயம்செய்து

---

## SAIVA SIDDHANTA STUDY CIRCLE

## சைவ சித்தாந்த ஆய்வு வட்டம்

## ஆய்வரங்கு

ஆய்வுரை: பேராசிரியர் பீற்றர் ஷோக்

பொருள்: PROBLEMS CONCERNING THE STUDY OF TAMIL BUDDHISM

மொழி: ஆங்கிலம்

காலம்: 5-08 1992 [இன்று] மாலை 4-30 மணி

இடம்: திருமறைக்கலாமன்றம், 38, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

ஆர்வலர் அனைவரையும் அழைக்கின்றோம்.

V. J. CONSTANTINE GENERAL SECRETARY
(சி-4832)

---

## 2-ம் வருட நினைவஞ்சலி



வீரஜனனம் 14 — 12 — 1973

வீரச்சாவு 5 — 8 — 1990

## 2-ம் லெப்டினன்ட் சரத்பாபு

(கந்தசாமி அகிலேஸ்வரன்)

துள்ளி விளையாடும் பள்ளிப் பருவத்தில்
தூய விடுதலைக்காய் துப்பாக்கி தனை அணைத்தாய்
எல்லை மீறி வந்த எதிரிப்படை சிதற
இரும்பாய் நின்று இமயமாய் உயர்ந்தாய்

05-08-1990 அன்று கோட்டையில் இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து வீரவேங்கைகளுக்கும் எம் வீர அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம்.

அகிலேஸ்வரன் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (2955)

அப்பா, அம்மா, அக்கா,
அண்ணா, தம்பி, மற்றும்
உறவினர்கள், நண்பர்கள்

---

இரண்டாம்

## ஆண்டு நினைவுக்காக

---


## ஒலிம்பிக்போட்டிகள் -1992

பார்சிலோனாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் 25ஆவது ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டிகளில் இதுவரை அறிவிக்கப்பட்ட முடிவுகளின்படி தங்கப்பதக்கங்களைப் பெற்றுக்கொண்டநாடுகளின் பதக்க விபரங்கள் வருமாறு:

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| சுதந்திரக் குடியரசுகளின் பொதுநலஅமைப்பு | 32 | 27 | 20 |
| அமெரிக்கா | 20 | 26 | 22 |
| ஜெர்மனி | 16 | 12 | 21 |
| சீனா | 14 | 19 | 12 |
| ஹங்கேரி | 10 | 07 | 02 |
| ஸ்பெயின் | 10 | 01 | — |
| தென்கொரியா | 08 | 03 | 09 |
| பிரான்ஸ் | 07 | 05 | 12 |
| அவுஸ்திரேலியா | 06 | 08 | 09 |
| கனடா | 06 | 01 | 06 |
| இத்தாலி | 04 | 05 | 08 |
| ருமேனியா | 04 | 04 | 06 |
| பிரிட்டன் | 04 | 03 | 05 |
| கியூபா | 04 | 02 | 07 |
| ஜப்பான் | 03 | 07 | 07 |
| போலந்து | 03 | 04 | 06 |
| செக்கோஸ்லோவாக்கியா | 02 | 02 | 01 |
| நோர்வே | 02 | 02 | — |
| துருக்கி | 02 | 01 | 01 |
| பல்கேரியா | 01 | 04 | 01 |
| நியூசிலாந்து | 01 | 03 | 03 |
| ப்ரேசில் | 01 | 01 | — |
| வடகொரியா | 01 | — | 02 |
| எசுத்தோனியா | 01 | — | 01 |
| கிரேக்கம் | 01 | — | — |

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரனாய் 12-9-1957

மாவீரனாய் 5-8-1990

(பொன்னுத்துரை இந்திரஹாசன்)

(கட்டைக்காடு - புல்லா வெளிச் சந்தியில் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவை தழுவிக் கொண்டார்)

வாழ வேண்டி வயதிலும் வரலாறாகியது தமிழ் ஈழம் மீட்டெடுக்க என்பதனால் - அழுகை விட்டோம். இனிவரும் ஆளும் காலம் - அதில் கட்டைக்காடு உன் பெயரைச் சொல்லும்

ஆனையிறவில் வீரச்சாவடைந்த அனைத்து வீர வேங்கைகளுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள்.

கில்னர் லேன் (பாரதி)
யாழ்ப்பாணம். - பொன்னுத்துரை குடும்பத்தினர்
(2959)

ஸ்தானிகருடன்விஜயம்செய்து பாதிக்கப்பட்ட தமிழ்மக்களை சந்தித்தார்.

### தமிழகத்தில்

தாகவும் எஸ் ஆர் பாலசுப் பிரமணியம் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார். அத்துடன் புலிகளுக்கு ஆதரவான தமிழக அமைப்பு ஒன்றின் நடவடிக்கைகள் தற்போது அதிகரித்து இருப்பதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.


## நல்லூர் கந்தன் திருவிழாவை முன்னிட்டு
## நாம் அமைத்திருக்கும்
# விற்பனை நிலையத்துக்கு வாருங்கள்

இதுவரை வெளிவந்த் தாயக விடுதலைப் பாடல்கள் அனைத்தும் ஒலிப்பதிவு நாடாக்களாக விற்பனையாகின்றன.

**அரிய சந்தர்ப்பம்!** **தவற விடாதீர்!**

- ❋ நெய்தல்
- ❋ விடியலின் பாடல்கள்
- ❋ யாக ராகங்கள்
- ❋ இந்த மண் எங்களின் சொந்த மண்
- ❋ வேங்கைகளின் விடுதலை வேதங்கள்
- ❋ களத்தில் நின்று வேங்கைகள்
- ❋ பாசறைப் பாடல்கள்
- ❋ களத்தில் மலர்ந்தவை
- ❋ பரணி பாடுவோம்
- ❋ களத்தில் கேட்கும் கானங்கள்
- ❋ புயல் கால ராகங்கள்
- ❋ இசையருவி

ஒலிப்பதிவு நாடா ஒன்றின் விலை ரூபா 125/- மட்டும்
இன்னும் தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீடுகள், புத்தகங்கள், பிரசுரங்கள்
அனைத்தும் பெற்றுக்கொள்ளலாம்

விற்பனை நிலையம்,
விடுதலைப் புலிகள் கலை. பண்பாட்டுக் கழகம்,
நல்லை ஆதீனம் முன்பாக,
நல்லூர்.

(சி/4823)


## ஆண்டு நினைவுக்காக

வீரஜனனம்:
1970-12-31

வீரச்சாவு:
1990-08-05



## 2-ம் லெப். மாதங்கி
(மாணிக்கம் சுமதி)

மாதங்கி!

ஆண்டிரண்டு சென்றது அவள் தூங்கி...
அந்த உதடுகள் உச்சரித்த மந்திரத்தை
ஆயிரம் உள்ளங்கள் தத்தெடுத்துக் கொண்டன.
அந்த விழிகளுக்குள் வாழ்ந்த கனவுகள்
ஆயிரம் தோழர்களை இயக்கும் இலட்சியங்கள்
அந்த சுதந்திரவித்து விழுந்த இடத்தில்
எத்தனை (விடுதலைப்) பூக்கள் புயலிற்கு சவாலாக
அந்தச் சூரியன் சுடரிட்ட ஒளியால்
எத்தனை இருளரக்கர்கள் மறைந்துகொண்டுவிட்டார்கள்
அவளுக்காய் நாம் பாடும் கல்லறைக் கீதங்கள்
இளைய வீரர்களுக்கான கருவறைத் தாலாட்டு

சுமதி வீதி, (மாதங்கி) - குடும்பத்தினர்
வராத்துப்பளை, பருத்தித்துறை. (2962)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


## லெப்டினன்ட் புரட்சி மாறன்
(தேவசகாயம்)

மண் மீட்புக்காய் கோட்டை
மதில் உடைக்கப் போனவனே
கண் மீட்டாய் தமிழன்னை
கைவிலங்குதனை ஒடித்தாய்
உன் உடம்புதனைப் பெற்ற
அன்னைக்கும் காட்டாமல்
பொன்னுடம்பை ஈந்து புகழுடம்பை
எய்தி விட்டாய்

நாட்டை மீட்கின்ற நற்பணிக்காய். களம் புகுந்து கோட்டை முற்றுகையில் முன் நடந்து உயிர் நீத்த ஏனைய போராளிகளையும் இந் நாளில் நினைவு கூருகின்றோம்.

லெப்டினன்ட் புரட்சி மாறனின் 2ஆம் ஆண்டு நினைவஞ்சலிப் பிரார்த்தனை நவாலி தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும், பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு இயக்க உறுப்பினர்கள். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நவாலி தெற்கு, பெற்றோர், சகோதரர்கள்,
மானிப்பாய். (சி/4829)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

04 08-1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5122

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-
26-6775, 26-786, 24-2558, 22-8096, 41-9487, 27-9707, 26-6566, 41-5015, 26-8223, 28-8051, 40-1737, 26-1928, 26-4450, 26-9992, 26-6526, 28-4183.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-
27-4289, 24-4323, 24-4282, 42-969, 24-7078, 26-3068, 26-6026, 27-5945, 27-3741, 27-2016, 22-3611, 27-5406, 41-1665, 25-954, 36-5826.